**அசல் வழக்கு எண். 72/2020** **தேதி09.06.2025**

**வா.சா.1 - சங்கப்பிள்ளை**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. வழக்குரையில் யார் முன்னிலையில் பஞ்சாயத்து பேசப்பட்டது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது மற்றும் பிரதிவாதி நல்லுசாமியின் இடங்களை பிரித்து காண்ப்பிப்பதற்கு தனித்தனி அத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.475/1 ல் பிரதிவாதி நல்லுசாமி போர்வெல் போட்டு அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். சர்வே எண்.475/3 ன் ஒரு பகுதியில் பிரதிவாதி குடியிருக்கிறார் என்றால் சரிதான். எந்த காலத்திலும் பிரதிவாதி நல்லுசாமி எனது அனுபவத்தை எந்த இடையூறும் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி நல்லுசாமி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்து முழுவதிலும் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். எனது நிலம் தரிசு நிலம் என்றால் சரிதான்.

2. மனாவாரி நிலம் ஆகும். பிரதிவாதியின் மீது உள்ள பொறாமையின் காரணத்தினால் அவர் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் நான் பிரதிவாதியின் மீது புகார் கொடுத்திருந்தால் போலீசார் பிரதிவாதியின் மீது நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றும், அவ்வாறு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது நிலத்திற்கும் பிரதிவாதி நிலத்திற்கும் கிழக்கு பகுதியில் உள்ள புறம்போக்கு நிலத்தை பயன்படுத்தி தான் நானும், பிரதிவாதியும் எங்களது நிலத்திற்கு சென்று வருவோம் என்றால் சரிதான். நான் மேற்படி புறம்போக்கு நிலத்தில் கொட்டகை அமைத்து பிரதிவாதிக்கு இடையூறு செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வேலி அமைக்க முயற்சி செய்த போது அதை பிரதிவாதி தடுத்தார் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி சட்டத்தை மதிக்காதவர் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்யுள்ளேன் என்றும், அவர் நியாயமானவர் என்றாலும் சரியல்ல.

3. எனக்கு சொந்தமான நிலங்கள் வழக்கு தாக்கல் செய்த போது கல்லுக்காடாக தான் இருந்தது என்றால் சரியல்ல. நான் விவசாயம் செய்து வருகிறேன். பிரதிவாதிக்கு அதிகமான சொத்துக்கள் உள்ளதால் அவரின் மீது உள்ள பொறாமையின் காரணமாக நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாவிற்கான வழக்கு மூலம் எழவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி அவரது நிலத்தின் சர்வே எண்.475/3 ன் தெற்கே கிழக்கு பக்க மூலையில்

தான் நுழைய வேண்டும் என்றால் சரியல்ல. தெற்கிலிருந்து வடக்கே தான் பிரதிவாதி அவரது நிலத்திற்குள் நுழைய முடியும். காலங்காலமாக எனது தந்தை, எனது சித்தப்பா இருந்த போது அனுபவம் செய்து வந்த பாதையை வேலி அமைத்து கொண்டு பிரதிவாதிக்கு இடையூறு செய்து கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல.

4. எனது மற்றும் பிரதிவாதியின் நிலத்திற்கு தெற்கே பன்னீர்செல்வம் என்பவரது தனிப்பட்ட பாதையும், மேற்கே அவரது கல்குவாரியும் உள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட கல் குவாரியை ஒட்டி கிழக்கேயும் கிணத்தடிக்கு மேல்புறமும் ஆத்துவாரியை ஒட்டி வடபுறம் உள்ள இடத்தில் பிரதிவாதிக்கு சொந்தமான பாதை உள்ளது என்றால் சரிதான். தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கிற்கு பின்பு தான் போர்வெல் போட்டேன் என்றால் எனக்கு அது நியாபகம் இல்லை. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனது நிலத்தில் போர்வெல் அமைத்திருந்தால் நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டிருப்பார் என்றால் சரியல்ல.

5. நான் வழக்கு நடவடிக்கைக்கு பின்னிட்டு தான் எனது நிலத்தில் போர்வெல் போட்டேன் என்றாலும், எனது சௌகரியத்திற்கு எனது நிலத்தை அனுபவம் செய்து வருகிறேன் என்றும், பிரதிவாதி எவ்வித இடையூறும் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி வசதி வாய்ப்புடனும், அதிக பணம் சம்பாதிப்பதாலும், அவரின் மீதுள்ள பொறாமையின் காரணமாக பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மற்றும் பிரதிவாதியின் நிலங்கள் பாதுப்பாக தான் உள்ளது என்றால் சரிதான். வேலி அமைப்பதற்கு அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி எனது அனுபவத்தை எந்த காலத்திலும் இடையூறு செய்யததில்லை என்றாலும், அவர் மீதுள்ள பொறாமையின் காரணமாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**